**செய்தி வெளியீடு எண்: 410** **நாள்: 10.07.2019**

**செய்தி வெளியீடு**

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் வீரத்தையும் வரலாற்றையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் தூத்துக்குடி மாவட்டம், கட்டாலங்குளத்தில் உள்ள அன்னாரது நினைவு மண்டபத்தில் ஆண்டுதோறும், அவரது பிறந்த நாள் விழா அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னாருக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக, சென்னை, எழும்பூர், இரயில் நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் ஜூலை – 11 அன்று அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.2.2019 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண். 110ன் கீழ் அறிவித்தார்கள்.

அதன்படி, சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோனின் 310ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, எழும்பூர், இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு 11.07.2019 அன்று காலை 9.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசால், தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்த தினமான ஜூலை 11ஆம் நாள், அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

வீரன் அழகுமுத்துக்கோன், ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் வீரத்திலகமாய் விளங்கிய மாவீரர் ஆவார். வீரன் அழகுமுத்துக்கோன் 11.07.1710 அன்று தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகேயுள்ள கட்டாலங்குளத்தில் பிறந்தார். இவரது தந்தை முத்துக்கோன், தாயார் பாக்கியத்தாய் அம்மாள் ஆவர்.

எட்டயபுரம் பாளையத்தின் 28வது பட்டம் ஜெகவீரராம வெங்கடேசுவர எட்டப்பரின் குமாரர், ஜெகவீரராம எட்டப்ப நாயக்கரின் நம்பிக்கைக்குரியவராகவும், நண்பராகவும் திகழ்ந்தார் விடுதலை வீரர் அழகுமுத்துக்கோன்.

1755ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் நெல்லைச் சீமையிலுள்ள எல்லா பாளையக்காரர்களிடமும் நேரடியாக வரி வசூலிக்க ஆரம்பித்தார்கள். விடுதலை உணர்வு நிரம்பப்பெற்ற வீரர் அழகுமுத்துக்கோன், வெள்ளையனுக்கு ஏன் வரிகட்ட வேண்டும் என்று எடுத்துக்கூறியவாறு, எட்டப்ப மன்னர் வரிகட்ட மறுத்ததால், பாளையக்காரர்களிடம் வரி வசூலிக்க 1756இல் மதுரை, நெல்லைச் சீமைக்கு கமாண்டராக ஆங்கிலேயர்களால் நியமிக்கப்பட்ட கான்சாகிப்பின் பீரங்கிப்படை எட்டயபுரத்தைத் தாக்கியது. எட்டயபுரம் ஆங்கிலேயர் வசமானது. விடுதலை வீரர் அழகுமுத்துக்கோன் எட்டப்ப மன்னரைக் காப்பாற்றி அவரை பெருநாழிகாட்டில் பாதுகாப்பாக வைத்திருந்தார்.

எட்டயபுரத்தை மீட்டெடுக்க விடுதலை வீரர் அழகுமுத்துக்கோன் படை திரட்டினார். மாவேலி ஓடை பெத்தநாயக்கனூர் பகுதியிலிருந்து வீரர்கள் பலர் படையில் சேர்ந்தார்கள். அவர்களுக்கு வீரன் அழகுமுத்துக்கோன் போர் பயிற்சி அளித்தார். எட்டயபுரத்தை மீட்பதற்காகப் பெரிய படையினை உருவாக்கி அதனை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார் வீரன் அழகுமுத்துக்கோன்.

ஒன்றிற்கு மன்னர் வெங்கடேஸ்வர எட்டப்பரும், மற்றொன்றிற்கு விடுதலை வீரர் அழகுமுத்துக்கோனும் தலைமை ஏற்றனர். படைகள் இரு வேறு திசையில் புறப்பட்டது. வீரன் அழகுமுத்துக்கோன் தலைமை ஏற்ற படை இரவில் பெத்தநாயக்கனூர் கோட்டையில் தங்கியது. இதனை, உளவறிந்த கான்சாகிப், திடீர் தாக்குதல் யுத்தியைக் கையாண்டான். இந்த திடீர் தாக்குதலை எதிர்கொள்ள இயலாமல் வீரர்கள் போரில் வீர மரணம் அடைந்தார்கள்.

அழகுமுத்துக்கோன் உட்பட உயிருடன் பிடிபட்ட 255 வீரர்களை நடுக்காட்டூர் சீமை என்ற இடத்திற்கு இழுத்துச்சென்று 248 பேரின் வலது கரங்களை வெட்டி எறிந்தார்கள். அழகுமுத்துக்கோன், கெச்சிலணன் சேர்வை, வெங்கடேசுரரெட்டு சேர்வை, முத்தழகு சேர்வை, பரிவாரம் முத்திருளன் இவரது தம்பி செகவீர ரெட்டுலட்சுமணன், தலைக்காட்டுபுரம் மயிலுப்பிள்ளை ஆகிய ஏழு பேரையும் பீரங்கி வாயில் கட்டி வைத்து சுட்டுத்தள்ளினார்கள். 1759ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்த கொடூரத்தை நிகழ்த்தினார்கள் வெள்ளையர்கள். அடிமைப்பட்டு உயிர் வாழ்வதைவிட சுதந்திர மனிதனாய் உயிர் விடுவோம் என்று தன் உயிரை இழந்த மாவீரர் அழகுமுத்துக்கோன் விடுதலைப் போருக்கான விதையைத் தமிழகத்தில் விதைத்தார்.

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 310ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், சென்னை, எழும்பூர், இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு 11.07.2019 அன்று காலை 9.00 மணியளவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**